**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 349/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | வடிவுக்கரசி |
| Father's Name/Husband Name: | பாலசுப்பிரமணி |
| Village : | கீழக்குடிக்காடு |
| Taluk : | குன்னம் |
| Age : | 45/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 06.05.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி 3 ஆஜர் . எதிரிகள் 1, 2, 4 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச. 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். எதிரி முருகேசன் என்பவரின் தம்பி தமிழன் என்பவரை திருமணம் செய்திருந்தேன் அவர் இறந்து விட்டார். அதனால் சிறிது காலம் கழித்து நான் மீண்டும் பாலசுப்பிரமணயன் என்பவரை நான் திருமணம் செய்து வாழ்ந்து வருகிறேன். திருமணத்தின் பிறகு எதிரிகள் வீதியில் தான் குடியிருந்து வருகிறேன். அதனால் எதிரிகள் எதற்காக இங்கு குடியிருக்கிறாய் என்று என்னிடம் பிரச்சனை செய்தார்கள்.

கடந்த 2016ம் வருடம் மாலை 5 மணியளவில் நான் என்னுடைய மகன் தினேஷ்குமார் என்னுடைய தம்பி திருமுருகன், என்னுடைய தங்கையின் கணவர் சந்திரன் ஆகியோர் என்னுடைய வீட்டில் இருந்தோம். அப்போது எதிரிகள் முருகேசன், வளர்மதி, முகிலன், மருதபாண்டியன் ஆகியோர் எனது வீட்டிற்கு வந்தனர். எதிரி வளர்மதி என்னுடைய சேலையை பிடித்து இழுத்து அடித்தார். எதிரி

முருகேசன் வாங்கு எடுத்து வந்து என்னை வெட்ட வந்தார். அப்போது எனது தம்பி திருமுருகன் தடுத்ததில் அவருடைய கண்ணில் வெட்டுப்பட்டது. எதிரிகள் கல்லால் அடித்ததில் எனக்கும் சந்திரன், திருமுருகன், தினேஷ்குமார் அடிபட்டது.

காயம்பட்ட நாங்கள் நான்கு பேரும் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிக்சையில் சேர்ந்தோம். மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரித்தனர். சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் எழுத்து மூலமான புகார் ஒன்றினை நான் தான் கொடுத்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **புகார் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எங்களை அடித்த எதிரிகளை பார்த்தால் அடையாளம் சொல்வேன். இன்று நீதிமன்றத்தில் மருதபாண்டியன் ஆஜராகியுள்ளார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு எழுதப்படிக்கத் தெரியுமா என்றால் தெரியாது. கையெழுத்து மட்டும் போடுவேன். நான் நீதிமன்றத்தில் தற்போது கூறிய சங்கதிகளை தான் போலிசார் என்னை மருத்துவமனையில் விசாரிக்கும்போது கூறினேன் என்றால் ஆமாம். ப.சா.2 திருமுருகன் எனது தம்பி என்றால் சரிதான். ப.சா.3 தினேஷ்குமார் என்னுடைய மகன் என்றால் சரிதான். ப.சா.4 சந்திரன் எனது தங்கையின் கணவர் என்றால் சரிதான். ப.சா.5 அண்ணாமலை என்பவர் கொழுந்தனார் என்றாலும் ப.சா.6 வினோத் அவருடைய மகன் என்றாலும், ப.சா.7 பத்மா சம்மந்தி முறை என்றாலும், ப.சா.8 பெரியசாமி அண்ணன் என்றாலும் ப.சா.9 செல்வராஜ் அண்ணன் முறை என்றாலும் சரிதான். ப.சா.10 வெற்றிவேல் மகன் முறை என்றாலும் ப.சா.11 மூர்த்தி தம்பி முறை என்றாலும் சரிதான்.

போலிசார் என்னை மருத்துவமனையில் விசாரித்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். மருத்துவரிடமும் தற்போது நீதிமன்றத்தில் கூறிய சங்கதிகளை தான் சொன்னேனா என்றால் தற்போது ஞாபகமில்லை. நீதிமன்றத்தில் சொல்லியுள்ளது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எனக்கும் எதிரிகளுக்கும் முன்விரோதம் இருந்ததால் அவர்களை பழி தீர்த்துக் கொள்வதற்காகவே அவர்களுக்கு எதிராக பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சம்பவம் நடந்த பிறகு எத்தனை முறை காவல்நிலையத்திற்கு அழைத்து விசாரணை செய்தார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. எழுத்து மூலமான புகாரை எப்போது காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் நான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருக்கும்போது கொடுத்தேன். அந்த புகாரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் போலிசார் இந்த வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.